<u>தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

முன்னிலை : திருமதி.J.கிறிஸ்டல் பபிதா, எம்.எஸ்.சி., எம்.எல்.,
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 21 ஆம் நாள் செவ்வாய் கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 181/ 2016

C.N.R.No.TNTS02-001578-2016

அரசுக்காக :-
காவல் ஆய்வாளர்,
தென்காசி காவல் நிலையம்,
கு.எண் : 41/ 2013 . . . குற்றமுறையிடுபவர்

/ எதிராக /

முத்துபாண்டி, வயது 37/13
த.பெ. செல்லையா,
மெயின்ரோடு,
தேவர்குளம்,
சங்கரன்கோவில்.

. . . எதிரி

இந்த வழக்கானது 15.02.2024 அன்று தென்காசி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.181/2016 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் தென்காசி, தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களின் உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, 25.02.2026 அன்று இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கு 02.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.R. சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. M. மாடசாமி

அவர்கள் ஆஜராகியும், வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்து இன்று (21.07.2026) இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

1. **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–**

கடந்த 22.01.2013 ம் தேதி 17.15 மணியளவில் இவ்வழக்கின் புகார்தாரர் சிவதாசனின் அண்ணன் குமாரசாமி என்பவர் சாட்சி –2 ஐ கிளீனராக வைத்துக் கொண்டு டிஎன் 76 எப் 5573 பதிவு எண் கொண்ட டாட்டா ஏசி வண்டியை ஓட்டிக் கொண்டு தென்காசி – இலஞ்சி ரோட்டில் உள்ள இபி அலுவலகம் பக்கம் கிழக்கிலிருந்து மேற்காக இடது ஓரமாக ஓட்டிக் கொண்டு போகும்போது எதிரே மேற்கிலிருந்து கிழக்காக டிஎன் 58 என் 1040 பதிவு எண் கொண்ட அரசு பேருந்தை எதிரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து டாட்டா ஏசி வண்டி மீது மோதியதில் அதனை ஓட்டி வந்த குமாரசாமிக்கு வலது கால் தொடை, இடது கால் முட்டு, வலது கை மணிக்கட்டு ஆகிய பகுதிகளில் பலத்த எலும்பு முறிவு காயங்களை உண்டு பண்ணி 26.01.2013 அன்று இறப்பை ஏற்படுத்திதாகவும் எனவே எதிரி இதச பிரிவு 304(A) –ன் குற்றங்கள் புரிந்துள்ளதாக தென்காசி காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. அழைப்பாணையின்பேரில் ஆஜரான எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.விமு.ச.207 பிரிவின் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. இரு தரப்பு வாதுரைகளையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்து எதிரி குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு பற்றி எதிரியிடம் வினவியபோது எதிரி குற்றச்சாட்டை மறுத்தார். எதிரி குற்றச்சாட்டை மறுத்த காரணத்தால் அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

4. இந்த வழக்கில் எதிரிக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அசா.11 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிதரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5. எதிரியிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின் படி எதிரிக்கு பாதகமாக உள்ள, சாட்சிகளின் சாட்சியங்களை எடுத்துக் கூறி வினவிய போது எதிரி 'பொய் சாட்சி' என்றும் தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் 'இல்லை' என்றும் கூறியுள்ளார்.

6. <u>இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்,</u>

அரசுத்தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 304(A) –ன் படியான குற்றங்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதாகும்.

7. **<u>தீர்வு:–</u>**

இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசுத்தரப்பில், தென்காசி – இலஞ்சி ரோட்டில் உள்ள இபி அலுவலகம் பக்கம் கிழக்கிலிருந்து மேற்காக இடது ஓரமாக ஓட்டிக் கொண்டு போகும்போது எதிரே மேற்கிலிருந்து கிழக்காக டிஎன் 58 என் 1040 பதிவு எண் கொண்ட அரசு பேருந்தை எதிரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து டாட்டா ஏசி வண்டி மீது மோதியதில் அதனை ஓட்டி வந்த குமாரசாமிக்கு வலது கால் தொடை, இடது கால் முட்டு, வலது கை மணிக்கட்டு ஆகிய பகுதிகளில் பலத்த எலும்பு முறிவு காயங்களை உண்டு பண்ணி 26.01.2013 அன்று இறப்பை ஏற்படுத்தியதாக கூறப்பட்டு எதிரி மீது இதச பிரிவு 304(A) – ன் படி குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

8. புகார்தாரர் அசா–1 சிவதாசன் என்பவர் தன்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் சம்பவத்தை குறித்து கூறிவிட்டு, குறுக்கு விசாரணை

சாட்சியத்தில், "நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்துக்குள்ளான வாகனத்தை யார் ஓட்டி வந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாகனத்தின் எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் எழுதாத பேப்பரில் என்னிடம் கையெழுத்து பெற்றார்கள் என்றால் சரிதான். அதன் பின்பும் போலீசார் என்னை விசாரிக்கவிலலை என்றால் சரிதான்" என்று கூறியுள்ளார். அசா.1, முதல் விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ள சங்கதிகளுக்கு முரணாக குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அசா–1 அரசுத்தரப்பு வழக்கை ஒத்து குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளிக்கவில்லை.

9. சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அசா–2 முருகராஜ் என்பவர் தன்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் சம்பவத்தை குறித்து கூறிவிட்டு, குறுக்கு விசாரணை சாட்சியத்தில், "விபத்து ஏற்படுத்திய வாகனம் எந்த வாகனம் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்" என்று கூறியுள்ளார். அசா.2 முதல் விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ள சங்கதிகளுக்கு முரணாக குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அசா–2 அரசுத்தரப்பு வழக்கை ஒத்து குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளிக்கவில்லை.

10. இவ்வழக்கின் புகார்தாரரான அசா–1 மற்றும் முக்கிய சாட்சியான அசா–2 ஆகியோர் அரசுத்தரப்பு வழக்கை ஒத்து சாட்சியம் அளிக்காத நிலையில், இதர சாட்சிகளின் சாட்சியத்தின் அடிப்படையில் மட்டும் எதிரி மீதான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவு செய்ய முடியாது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11. முடிவாக, எதிரி மீதான இதச பிரிவு 304(A) –ன் படியான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரி குற்றவாளி அல்ல என்றும் முடிவு செய்து, எதிரியை இதச பிரிவு 304(A) –ன் படியான குற்றத்திலிருந்து குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 255(1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்துள்ள நிலையில், மேல் முறையீட்டு காலத்திற்கு பின் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திட உத்தரவிடப்படுகிறது.

12. இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் தாக்கல் இல்லை.

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு ஜுலை திங்கள் 21 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.21 15:42:47 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
தென்காசி.

<u>அரசு தரப்பு சாட்சிகள் </u>: –

| அரசுத்தரப்பு சாட்சி எண் | சாட்சியின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1 | திரு. சிவதாசன் | புகார்தாரர் |
| 2 | திரு. முருகராஜ் | கண்ணுற்ற சாட்சி |
| 3 | திரு. நவீன்குமார் | சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சி |
| 4 | திரு. விஷ்வநாதன் | பார்வை மகஜர் சாட்சி |
| 5 | திரு. ஏகம்பன் | சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சி |
| 6 | திரு. முனியாண்டி | சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சி |
| 7 | மருத்துவர் சீதாலட்சுமி | பிரேத பரிசோதனை சான்று |

| | | |
|---|---|---|
| | | வழங்கிய சாட்சி |
| 8 | திரு. சுப்பிரமணியன் | பார்வை மகஜர் சாட்சி |
| 9 | திரு. அருணாசலம் | பணி நியமன சான்று வழங்கிய சாட்சி |
| 10 | திருமதி. செண்பகவள்ளி | வாகனத்தை ஆய்வு செய்து சான்று வழங்கிய சாட்சி |
| 11 | திரு. பண்டாரம்<br>(உதவி ஆய்வாளர்) | வழக்கு பதிவு செய்த சாட்சி |

அரசு தரப்பு சான்றாவணங்கள் :-

| அரசுத்தரப்பு சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர் / சான்றளித்தவர் |
|---|---|---|
| 1. | புகார் மனு | அ.சா.1 |
| 2 | பார்வை மகஜர் | அ.சா.4 |
| 3 | உடல் கூறாய்வு சான்று | அ.சா.9 |
| 4 | பணி நியமனச்சான்று | அ.சா-9 |
| 5 | பேருந்தின் ஆய்வறிக்கை | அ.சா.10 |
| 6 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.11 |
| 7 | வரைபடம் | அ.சா.11 |

அரசுத்தரப்பு சான்று பொருட்கள்:- இல்லை

எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : - இல்லை

எதிரி தரப்பு சான்று பொருள்கள்: - இல்லை.

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2026.07.21 15:42:53 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
தென்காசி.

பின் குறிப்பு:-

- ✓ எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்தார்.
- ✓ சாட்சிகள் மூன்று நாட்களுக்கு மேல்விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
- ✓ காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.